# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 82 — 1973 ඔක්තෝබර් 19 වැනි සිකුරාදා — 1973.10.19

82 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்வதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 405 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. | 410 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 414 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. ... | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத்தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


**கவனிக்க.**—கடற்றொழில் (திருத்தம்) சட்டமூலமும், உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலமும், லொறிகளைத் தேவைக்கெடுத்தலும் கொள்ளலும் சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 5, 10 ஆகிய பிரிவுகளினால் எனகுரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய நான் இக்கட்டளை வாயிலாக—

(1) கேகாலை மாவட்டத்தில் தெஹிகம்பல் கோறளை, கீழ் புலத்கம பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவிலுள்ள எகொட பொத்த பற்றுக் கிராமப் பிரதேசத்தை இதனோடுள்ள அட்டவணையில் இன்னும் கூடுதலாக விவரிக்கப்பட்டுள்ள அமிதிரிகலை, இம்புலான ஆகிய இரு புதிய கிராமப் பிரதேசங்களாகப் பிரிக்கிறேன்; அத்துடன்

(2) 1974 யூலை மாதத்தின் முதலாம் நாளை, முற்கூறப்பட்ட அமிதிரிகலை, இம்புலான ஆகிய கிராமப் பிரதேசங்கள் ஒவ்வொன்றிலும் அமைக்கப்படவிருக்கும் கிராமச்சபைகளின் பதவிக்காலம் தொடங்கவேண்டிய திகதியாக நியமிக்கிறேன்.

நீல் த அல்விஸ்,
பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1973 ந் ஞு செப்டம்பர் மீ 24 ந் டெ.

### அட்டவணை

பின்வரும் கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட அமிதிரிகலைக் கிராமப் பிரதேசம் :—

இல. 101அ—இந்துருன.
இல. 102—அமிதிரிகலை.
இல. 103—மாபிற்றிகம வடக்கு.

இல. 98—வல்கம்பத (பாகம்)—லேனகல, மகாகந்தக் குடியேற்றம் ஆகிய கிராமங்களையும் வின்சிற்றித் தோட்டம் (பாகம்) மகல்கந்தத் தோட்டம் (பாகம்) ஆகியவற்றையும் கொண்டது.

இல. 101—வஹரக (பாகம்)—வஹரகக் கிராமத்தையும் மடல்தென்ன தோட்டம் (பாகம்) ஆகியவற்றையும் கொண்டது.

பின்வரும் கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்ட இம்புரானக் கிராமப் பிரதேசம் :—

இல. 99—லேவங்கம.
இல. 99அ—கலபிற்றமட.
இல. 100—ருவான்வலை (ருவான்வலைப்பட்டின சபை எல்லைகளுக்கு வெளியேயுள்ள பகுதி).
இல. 104—போபெற்ற (ருவான்வலைப்பட்டின சபை எல்லைகளுக்கு வெளியேயுள்ள பகுதி).

இல. 98—வல்கம்பத (பாகம்)—வல்கம்பதக் கிராமத்தையும், துனுமலத் தோட்டத்தின் பகுதியையும் கொண்டது.

இல. 101—வஹறக்க (பாகம்)—மொறதொட்ட, வெத்தவல, பட்டேகந்தக் குடியேற்றம் ஆகிய கிராமங்களையும் சன்னிகுறோப்ட் தோட்டம், அர்டிசன் தோட்டம், வெத்தவலத் தோட்டம் ஆகியவற்றையும் கொண்டது.

10-755/1—19.10.73 திகதிய வர்த்தமானி இல. 82

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஞு மே மீ 5 ந் டெ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

### கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய நான் இவ்வறிவித்தல் வாயிலாக—

(1) சப்பிரகமுவை மாகாணம் கேகாலை மாவட்டத்திலுள்ள தெஹிகம்பல் கோறளை, கீழ் புலத்கம பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவிலுள்ள அமிதிரிகலைக் கிராமப் பிரதேசத்தில் தற்போது மைந்துள்ளவையும் இதனோடுள்ள முதலாம் அட்டவணையின் I ஆம் நிரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறானவையுமான வட்டாரங்கள் ஒவ்வொன்றையும் அவ்வட்டவணையின் II ஆம் நிரையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளைக்கொண்ட புதிய வட்டாரங்களாக உட்பிரிவினை செய்கிறேன் ;

(2) சப்பிரகமுவ மாகாணம் கேகாலை மாவட்டத்திலுள்ள தெஹிகம்பல்கோறளை, கீழ் புலத்கம பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவிலுள்ள இம்புலானக் கிராமப் பிரதேசத்தில் தற்போதமைந்துள்ளவையும் இதனோடுள்ள இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறானவையுமான வட்டாரங்கள் ஒவ்வொன்றையும் அத்தகைய வட்டாரங்களின் இணைந்த பிரதேசத்தையும் அவ்வட்டவணையின் II ஆம் நிரையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்ட புதிய வட்டாரங்களாக உட்பிரிவினை செய்கிறேன் ; அத்துடன்

(3) இவ்வறிவித்தலின் (1), (2) ஆகிய ஏற்பாடுகள் :—

(அ) முற்கூறப்பட்ட அமிதிரிகலை, இம்புலான ஆகிய கிராமப் பிரதேசங்களினது கிராமச்சபைகளின் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 1974 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய எவ்விடயத்தோடும் அவ்வேற்பாடுகள் சம்பந்தப்பட்ட வரை இவ்வறிவித்தல் கசெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டுமெனவும் ;

(ஆ) வேறெவ்விடயத்தோடும் அவை சம்பந்தப்பட்டவரை 1974 ஆம் ஆண்டு யூலை மாதத்தின் முதலாம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டுமெனவும்,

வெளிப்படுத்துகிறேன்.

நீல் த அல்விஸ்,
பதில் அரசாங்க நிர்வாகம்,
உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1973 ந் ஆண்டு செப்டம்பர் மீ 24 ந் உ.

முதலாம் அட்டவணை

**அமிதிரிகலைக் கிராமப் பிரதேசம்**

| நிரை I<br>தற்போதுள்ள அட்டவணைகள் | நிரை II<br>புதிய வட்டாரங்கள் |
|---|---|
| இல. 98–வல்கம்பத .. | 1 ஆம் வட்டாரம்–மகாகந்த–மகாகந்தக் குடியேற்றத்தைக்கொண்டது |
| | 2 ஆம் வட்டாரம்–புஸ்னகொட–புஸ்னகொட, லேனுகல ஆகிய கிராமங்களையும் வல்கம்பத கிராமசேவகர் பிரிவுக்குள்வரும் மகல்கந்தத் தோட்டத்தின் அந்தப் பகுதியையும் வல்கம்பத கிராம சேவகர் பிரிவுக்குள்வரும் வின்சிற்றித் தோட்டத்தின் அந்தப் பகுதியையும் கொண்டது |
| | 3 ஆம் வஹரக–வஹரகக் கிராமத்தையும் மட்ல தென்னந்தோட்டத்தையும் வஹரகக் கிராமசேவகர் பிரிவுக்குள் வரும் நாகொல்கந்தத் தோட்டத்தின் அந்தப் பகுதியையும் வஹரகக் கிராமசேவகர் பிரிவுக்குள் வரும் நாகொல்கந்தத் தோட்டத்தின் அந்தப் பகுதியையும் வஹரகக் கிராமசேவகர் பிரிவுக்குள் வரும் வின்சிற்றித் தோட்டத்தின் அந்தப் பகுதியையும் கொண்டது |
| இல. 101 அ–இந்துரான .. | 4 ஆம் வட்டாரம்–கொனகல்தேனிய–கொனகல்தேனியப் பட்டினத்தையும் புறெம்பொத்தக் கிராமத்தையும் வடக்கு சன்னிகுறெப்ற் தோட்டத்தையும் இந்துரான கிராமசேவகர் பிரிவுக்குள் வரும் தனலெட்சுமித் தோட்டத்தின் அந்தப் பகுதியையும்கொண்டது |
| | 5 ஆம் வட்டாரம்–வஹகுல–வஹகுல தலுவலான ஆகிய கிராமங்களையும் இந்துரான கிராமசேவகர் பிரிவுக்குள்வரும் ஸ்ரின்பொட் தோட்டத்தினதும் இந்துரானைத் தோட்டத்தினதும் அந்தப் பகுதிகளையும் கொண்டது. |
| | 6 ஆம் வட்டாரம்–இந்துரான–இந்துரானக் கிராமத்தையும் செஸ்ரார்போட் தோட்டத்தையும் கொண்டது. |
| இல. 102–அமிதிரிகலை | 7 ஆம் வட்டாரம்–பட்டுவிற்ற–பட்டுவிற்றக் கிராமத்தையும் மொறகஹ எல்ல கொறக்க ஹெந்தொலைக்கு வடக்கே யமைந்துள்ள அமிதிரிகலை வடக்கின் அந்தப் பகுதியையும் அமிதிரிகலைக் கிராம சேவகர் பிரிவுக்கும் வரும் தனலெட்சுமித் தோட்டத்தின் அந்தப் பகுதியையும் கொண்டது. |
| | 8 ஆம் வட்டாரம்–அமிதிரிகலை வடக்கு–மொறகஹ எல்ல கொறக்க ஹெந்தொலைக்குத் தெற்கேயுள்ள அமிதிரிகலை வடக்குக் கிராமத்தின் அந்தப் பகுதியைக்கொண்டது. |
| | 9 ஆம் வட்டாரம்–அமிதிரிகலை தெற்கு–அமிதிரிகலை தெற்குக் கிராமத்தையும் கிரேகிபார்க் தோட்டத்தையும் லிண்டேஸ்ற் தோட்டத்தையும் கொண்டது. |
| | 10 ஆம் வட்டாரம்—உடகனுகல–உடகனுகலக் கிராமத்தையும் தெஹியேவற்ற மாபிற்றிகமத் தோட்டத்தையும் சுவ்கங்கம் தோட்டத்தையும் கொண்டது. |
| இல. 103 மாபிற்றிகம தெற்கு | 11 ஆம் வட்டாரம்–பல்லேகனுகல–பல்லேகனுகல கிராமத்தையும் கிளாங்க் தோட்டத்தையும் கொண்டது. |
| | 12 ஆம் வட்டாரம்–மெட்கொட–மெடகொட, மேகொட குடாகம ஆகிய கிராமங்களையும் கிளேருத் தோட்டத்தையும் கொண்டது. |
| இல. 103அ–மாபிற்றிகம வடக்கு | 13 ஆம் வட்டாரம்–கொனுகல தெற்கு கொனுகல தெற்குக் கிராமத்தையும் சிசில்ரன் தோட்டம் ஆகியவற்றையும் கொண்டது. |
| | 14 ஆம் வட்டாரம்–கொனுகல வடக்கு.—கொனுகலக் கிராமத்தையும் மாபிற்றிகம வடக்குக் கிராமசேவகர் பிரிவுக்குள் வரும் கொனுகல (இந்தரண)த் தோட்டத்தின் அந்தப் பகுதியையும் கொண்டது. |
| | 15 ஆம் வட்டாரம்—மொறலிய–மொறலிய, மாபிற்றிகம ஆகிய கிராமங்களையும் மாபிற்றிகம வடக்குக் கிராமசேவகர் பிரிவுக்குள்வரும் மொறலியத் தோட்டத்தின் அந்தப் பகுதியையும் கொண்டது. |

இரண்டாம் அட்டவணை

**இம்புலானக் கிராமப் பிரதேசம்**

| நிரை I தற்போதுள்ள வட்டாரங்கள் | நிரை II புதிய வட்டாரங்கள் |
|---|---|
| இல. 98 வல்கம்பத .. | 1 ஆம் வட்டாரம்—வல்கம்பத—வல்கம்பதக் கிராமத்தையும் வல்கம்பத கிராமசேவகர் பிரிவுக்குள் வரும் துனுமலேத் தோட்டத்தின் அந்தப் பகுதியையும் கொண்டது. |
| இல. 99அ–கலபிற்றிமட .. | 2 ஆம் வட்டாரம்—துனுமல—துனுமன, கித்தலங்கமுவ ஆகிய கிராமங்களையும் கலபிற்றமடக் கிராமசேவகர் பிரிவுக்குள் வரும் துனுமலத் தோட்டத்தின் அந்தப் பகுதியையும் கொண்டது. |
| | 3 ஆம் வட்டாரம்—கலபிற்றமட—கலபிற்றமடுக் கிராமம்கலபிற்ற மடப் பட்டினம், கடிகமுவ, உறுவல ஆகியவற்றைக் கொண்டது. |
| இல. 99 லேவங்கம .. | 4 ஆம் வட்டாரம்—இம்புல்கொடல—இம்புல்கொட, இம்புல்கொடக் குடியேற்றம் நாரங்கஸ்தென்ன ஆகிய கிராமங்களையும் கலபிற்றமடத் தோட்டத்தையும் கொண்டது. |
| | 5 ஆம் வட்டாரம்—தலவத்த—தலவத்த, தும்புலுவ ஆகிய கிராமங்களைக் கொண்டது. |
| இல. 100–இம்புலான .. இல. 104–போபெற்ற | 7 ஆம் வட்டாரம்—சியபலாவ—சியபலாவல பெத்மகெதற, கெற்றபுறுத ஆகிய கிராமங்களையும் பீற்றர்ஹில் தோட்டத்தையும் கொண்டது. |
| | 8 ஆம் வட்டாரம்—நிவுங்ஹெல்ல—நிவுங்ஹெல்லக் கிராமத்தைக் கொண்டது. |
| | 9 ஆம் வட்டாரம்—இம்புலான—ருவான்வலைப் பட்டினசபை எல்லைகளுக்கு வெளியேயுள்ள இம்புலானக் கிராமத்தின் அந்தப் பகுதியையும் கடதறக் கிராமத்தையும் கொண்டது. |
| | 10 ஆம் வட்டாரம்—ஈரபொலமுல்ல—ஈரபொலமுல்ல, போபெற்ற, போகமுவ ஆகிய கிராமங்களையும் பேபெற்றக் கிராமசேவகர் பிரிவுக்குள் வரும் டோவர் தோட்டத்தின் அந்தப் பகுதியையும் கொண்டது. |
| | 11 ஆம் வட்டரரம்—மொறவத்த—ருவான்வலைப் பட்டின சபை எல்லைகளுக்கு வெளியேயுள்ளதும் தும்புலுவ ஓயாவுக்குக் கிழக்கேயமைந்திருப்பதுமான மொறவத்தக் கிராமத்தின் அந்தப் பகுதியையும் அகுற்னமுல்லக் கிராமத்தையும் கொண்டது. |
| | 12 ஆம் வட்டாரம்—மஹல்ல—மஹல்லக் கிராமத்தையும் தும்புலுவ ஓயாவுக்கு மேற்கேயமைந்துள்ள மொறஹல்லக் கிராமத்தின் அந்தப் பகுதியையும் மஹல்லத் தோட்டம், வட்டகலத் தோட்டம், தம்புவத்த் தோட்டம், ருவான்வலைத் தோட்டம், ரேய் தோட்டம், போபெற்ற கிராமசேவகர் பிரிவுக்குள்வரும் மொறலியத் தோட்டத்தின் அந்தப்பகுதி ஆகியவற்றையும் கொண்டது. |
| | 13 ஆம் வட்டாரம்.—மன்னெறுவ—தன்னெறுவ, குபஸ்வலன் ஆகிய கிராமங்களையும் குப்ஸ்வலனத் தோட்டத்தையும் கொண்டது. |
| | 14 ஆம் வட்டாரம்—ரட்டகல—ரட்டகல, பொட்டேகந்த ஆகிய கிராமங்களையும் பொட்டேகந்தத் தோட்டத்தையும் இம்புலான கிராம சேவகர் பிரிவுக்குள்வரும் டோவர் தோட்டத்தின் அந்தப்பகுதியையும் கொண்டது. |
| இல. 101 வறைரக .. | 15 ஆம் வட்டாரம்—மொறதோட்ட—மொறதோட்ட, பொட்டேகந்தக் குடியேற்றம் ஆகிய கிராமங்களையும் சன்னிகுறெுப்ற் தோட்டம், ஆட்டிசன் தோட்டம், வெட்டகலத் தோட்டம் ஆகியவற்றையும் கொண்டது. |

10–755/2—19.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 82

---

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

"(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 47 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினுல் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய நான், சொல்லப்பட்ட 47ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு திருகோணமலை மாவட்டத்திலுள்ள சாம்பல்தீவு கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபைக்கு ஏற்புடையதாதலாகாது என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

நீல் த அல்விஸ்,
பதில் அரசாங்க நிர்வாகம்,
உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு 7,
1973, செத்தெம்பர் 29.

10—739—19.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 82

---

எல். டி.—பி. 70/44

**வீடமைப்பு, நகரச்சீர்திருக்கக் கட்டளைச் சட்டம்**

7.8.1973 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் தேசிய அரசுப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் பொதுமக்கள் அறிவதற்காகப் பிரசுரிக்கப்படுகின்றது.

டீ. இராசேந்திரா
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள்
அமைச்சு.

கொழும்பு, 27.9.1973.

தீர்மானம்

(268 ஆம் அத்தியாயமான) வீடமைப்பு நகரச் சீர்திருத்தக் கட்டளைச் சட்டமானது 1.8.1973 ஆந் திகதியிலிருந்து இதனோடுள்ள அட்டவணையில் வரையறை செய்யப்பட்டுள்ள பிரதேசத்துக்குள் நடைமுறையில் இருத்தல் வேண்டுமென மேற் கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 3 (ஆ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ்ப் பேரவை தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பெரும்பாக அரசிறை அலுவலரின் பிரிவிலுள்ள நல்லூர் கிராமச்சபைப் பிரதேசத்தில் அமைந்துள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான காணிப் பகுதி அடங்கலும் :—

வட்டாரம் இல.1 முக்குறுணிப்பிள்ளையார் கோவில்.
வடக்கு :—கோப்பாய் தெற்கு கிராம எல்லை ;
கிழக்கு :—யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி ;
தெற்கு :—ஆடியபாதம் வீதி ;
மேற்கு :—நவக்கிரி ஒழுங்கையும் கோப்பாய் தெற்கு கிராம எல்லையும்.

வட்டார இல. 2 க. மி. பாடசாலை.
வடக்கு :—கோப்பாய் தெற்கு கிராம எல்லை ;
கிழக்கு :—ஆடியபாதம் வீதியிலிருந்து புதுச்செம்மணி வீதிக்குப் பிரிந்து செல்லும் ஐயன்காவடலி ஒழுங்கை ;
தெற்கு :—ஆடியபாதம் வீதி ;
மேற்கு :—யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதி.

வட்டார இல. 3 சந்திரசேகரப்பிள்ளையார் கோவில்
வடக்கும் கிழக்கும் :—கோப்பாய் தெற்கு கிராம எல்லை ;
தெற்கு :—ஆடியபாதம் வீதி ;
மேற்கு :—ஆடியபாதம் வீதியிலிருந்து புதுச்செம்மணி வீதிக்குப் பிரிந்து செல்லும் ஐயன்காவடலி ஒழுங்கை.

வட்டாரம் இல . 4 பூதவராயன் கோவில்
வடக்கு :—சந்தையடி—முடமாவடி—ஒழுங்கை வாலையம்மன் கோவிலடி ஒழுங்கை ;
கிழக்கு :—யாழ்ப்பாணம்–பருத்தித்துறை வீதி ;
தெற்கு :—கொண்டலடி வைரவர் கோவில் வீதி ;
மேற்கு :—முடமாவடி வீதி.

வட்டாரம் இல. 5 வாலையம்மன் கோவில்
வடக்கு :—ஆடியபாதம் வீதி ;
கிழக்கு :—யாழ்ப்பாணம்–பருத்தித்துறை வீதி ;
தெற்கு :—சந்தையடி வாலையம்மன் கோவில் ஒழுங்கை ;
மேற்கு :—முடமாவடி வீதி.

வட்டார இல. 6 ஆராய்ச்சி நிலையம்
வடக்கு :—கோண்டாவில் கிராம எல்லை ;
கிழக்கு :—நவக்கிரி ஒழுங்கை ;
தெற்கு :—ஆடியபாதம் வீதி ;
மேற்கு :—பலாலி வீதி.

வட்டார இல. 7 பரமேஸ்வராக் கல்லூரி
வடக்கு :—ஆடியபாதம் வீதி ;
கிழக்கு :—பலாலி வீதி ;
தெற்கு :—நாச்சிமார்கோவில் வீதி ;
மேற்கு :—வண்ணார்பண்ணையும் கொக்குவில் கிராம எல்லையும்.

வட்டார இல. 8 தலங்காவற்பிள்ளையார் கோவில்
வடக்கு :—ஆடியபாதம் வீதி ;
கிழக்கு :—காளிகோவில் ஒழுங்கை ;
தெற்கு :—சிவன்கோவில் வீதி ;
மேற்கு :—பலாலி வீதி ;

வட்டார இல. 9 முடமாவடி
வடக்கு :—ஆடியபாதம் வீதியும் காளிகோவில் ஒழுங்கையும் ;
கிழக்கு :—முடமாவடி வீதி ;
தெற்கு :—சிவன்கோவில் வீதி ;
மேற்கு :—காளிகோவில் ஒழுங்கை ;

வட்டார இல. 10 சாளியப்பிட்டி
வடக்கு :—செம்மணி வீதி ;
கிழக்கு :—கண்டி வீதி ;
தெற்கு :—அத்திக்காடு ஒழுங்கை ;
மேற்கு :—ஆனந்தம்வடலி வீதி.

வட்டார இல. 11 அரியாலை மேற்கு
வடக்கு :—கண்டி வீதியும் கடல்நீரேரியும் ;
கிழக்கு :—புளியங்குளம் ஒழுங்கை ;
தெற்கு :—கடல்நீரேரி ;
மேற்கு :—முள்ளிவளவு ஒழுங்கையும் கண்டி வீதியும்.

வட்டார இல. 12 அரியாலைகிழக்கு.
வடக்கு , கிழக்கு , தெற்கு :—கடல்நீரேரி ;
மேற்கு :—புளியங்குளம் ஒழுங்கை.

10—740—19.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 82

---

எல். டி.—பீ. 19/58.

## இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச் சட்டம்

(272 ம் அத்தியாயமான) இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் 27 ம் பிரிவின் கீழ் அதற்கான தக்க அதிகார சபையால் அதாவது பத்தேகம கிராம சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவினால் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அவரால் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 05 ந் உ.

### ஒழுங்குவிதிகள்

1. எவரும் எம்மிருகத்தையும்—

(அ) சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரினால் அம்மிருகம் பரிசோதிக்கப்பட்டு மனிதர் உண்பதற்காக அறுக்கப்படுதற்கு ஏற்றது என அங்கீகரிக்கப்பட்டாலன்றி ; அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதியின் (அ) என்னும் பந்தியின் கீழ் அம்மிருகம் அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து 24 மணிநேரம் காலாவதியான பின்னர் எந்நேரத்திலும் ; அல்லது

(இ) எத்தினத்திலும் மு. ப. 7.00 மணிக்கும் 11.00 மணிக்குமிடையிலன்றி,

மிருகவறுப்புக் களத்தில் அறுக்கலாகாது.

ஆயினும், புறநடையானவையெனத் தலைவர் கருதக்கூடிய சந்தர்ப்பங்களில் இதன்கண் குறிப்பிடப்பட்டுள்ள நேரமல்லாத வேறெந்த நேரத்திலும் எம்மிருகத்தையும் அறுப்பதற்குத் தலைவர் அதிகாரமளிக்கலாம்.

2. (1) ம் ஒழுங்குவிதியின் (அ) என்னும் பந்தியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் ஏதேனும் மிருகம் மிருகவறுப்புக் கள வளவிலிருந்து உயிருடன் வெளியே கொண்டுபோகப்பட்டிருக்கும் எந்த மிருகத்தையும் அது மீண்டும் அவ்வொழுங்குவிதியின்கீழ் பரிசோதிக்கப்பட்டு மனிதர் உண்பதற்காக அறுக்கப்பட ஏற்றது என அங்கீகரிக்கப்பட்டாலன்றி எவரும் எம்மிருகத்தையும் மிருகவறுப்புக் களத்தில் அறுத்தலாகாது.

3. (1) ஓராம் ஒழுங்குவிதியின் (அ) என்னும் பந்தியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அது நோயுற்றதென அல்லது மனிதர் உண்பதற்கு அறுக்கப்பட உகந்ததல்ல எனக் காணப்பட்டால், சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர், எம்மிருகம் அறுக்கப்படுவதைத் தடை செய்யலாம்.

(2) இந்த ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் அறுக்கப்படுதற்குத் தடைசெய்யப்பட்ட மிருகமெதையும் எந்த ஆளும் அறுக்கலாகாது.

4. மிருகவறுப்புக்களத்தின் வளவுக்குள் மிருகமெதையும் கொண்டு வரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் அவ்வளவுக்குள் இருக்கையில் அம்மிருகத்துக்குப் போதிய அளவு தீனியும் தண்ணீரும் கிடைக்க செய்வதை உறுதிப்படுத்தற்கு அவசியமான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

5. மிருகவறுப்புக்களத்தின் வளவுக்குள் மிருகமொன்றைக் கொண்டு வரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் அறுக்கப்பட உகந்ததல்ல என நிராகரிக்கப்பட்டால் அப்படி நிராகரிக்கப்பட்ட உடனே, அம்மிருகத்தை அவ்வளவை விட்டு அகற்ற வேண்டும் அல்லது அகற்றப்படச் செய்ய வேண்டும்.

6. மிருகவறுப்புக்களத்தில் அறுக்கப்பட்ட எம்மிருகத்தினதும் இறைச்சி அல்லது கழிவிறைச்சி நோயுற்றது, அல்லது மனிதர் உண்பதற்கு உகந்ததல்லவென் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரும் அபிப்பிராயப்பட்டால், அவர் அவ்விறைச்சியை அல்லது கழிவிறைச்சியை உடனடியாக அழித்தொழிக்கப்பட அல்லது அவ்விறைச்சி அல்லது அக்கழிவிறைச்சி விற்பனைக்காக வெளியில் வைக்கப்படாமல் அல்லது மனிதர் உண்பதற்காக உபயோகிக்கப்படாமல் இருக்கத்தக்கவகையில் அது அகற்றப்படச் செய்ய வேண்டும். சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரின் பணிப்புரையின் கீழன்றி அத்தகைய இறைச்சி அல்லது கழிவிறைச்சியை மிரிகவறுப்புக்களத்திலிருந்து எவரும் எருத்துச் செல்லலாகாது.

7. மனிதர் உண்பதற்காக அறுப்பதற்கு உகந்தது என அங்கீகரிக்கப்படாத அல்லது 3 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் அறுக்கப்படுதற்குத் தடை செய்யப்பட்டிருக்கும் எம்மிருகத்தையும் அறுப்பதற்கு அறுப்புக்களக் காப்பாளர் அனுமதித்தலாகாது.

8. அறுப்புக்காப்பாளரினால் “கி. ச. ப.” என்னும் எழுத்துகளாலும் ஏற்றவாறு “மாட்டிறைச்சி” அல்லது “ஆட்டிறைச்சி” என்னும் சொற்களினாலும் என்னும் குறியினால் அம்மிருகச் சடலத்தின் முன்னங்கால் பாகத்திலும் பின்னங்கால் பாகத்திலும் முத்திரை இடப்பட்டாலன்றி மனிதர் உண்பதற்கெனக் கருதப்பட்ட எம்மிருகத்தின் சடலத்தையும் அறுப்புக்களத்திலிருந்து எவரும் வெளியே கொண்டு போகலாகாது.

9. எம்மிருகமும், வேறெந்த மிருகத்தின் முன்னிலையில் அல்லது முன்னர் அறுக்கப்பட்ட ஒவ்வொரு மிருகத்தின் சடலமும் அவ்வளவிலிருந்து அகற்றப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு அவ்வளவு சுத்தம் செய்யப்படும் வரைக்கும் அறுக்கப்படலாகாது.

10. தொற்றுநோய், ஒட்டுநோய், சருமநோய் ஏதனுைம் பீடிக்கப்பட்டிருக்கும் அல்லது அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த அல்லது அத்தகைய நோயினுல் பீடிக்கப்பட்ட யாரேனுமொருவருக்கு அண்மையில் பணிவிடை செய்த எந்த ஆளும், நோய் தொற்றும் காலமும் நோய்க் கிருமிகள் பெருகுங்காலமும் முடியும் வரைக்கும் மிருகவறுப்புக்களத்துக்குள் பிரவேசிப்பதை அல்லது மிருகமெதையும் அறுப்பதில் பங்கெடுத்துக் கொள்வதை மிருகவறுப்புக்களத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆள் அனுமதித்தலாகாது.

11. நியாயமான காலங்கள் அனைத்திலும் மிருகவறுப்புக்களத்துக்குள் பிரவேசித்து பரிசோதனை செய்வது சௌக்கிய வைத்திய உத்தியோகத்தருக்குச் சட்டமுறையாதல் வேண்டுமென்பதுடன் அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தருக்குத் தேவைப்படக்கூடிய சகல உதவிகளைச் செய்யவும் வேண்டும்.

12. சபையினுல் நிறுவப்பட்டுள்ள மிருகவறுப்புக்களத்தை உபயோகிப்பதற்குப் பின்வரும் விகிதங்களிலான கட்டணமொன்று சபைக்கு முற்பணமாகச் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன் கட்டணம் செலுத்தியமைக்குச் சான்றுக உத்தியோகபூர்வமான பற்றுச்சீட்டு ஒன்றில்லாமல் மிருகமெதுவும் அறுக்கப்படலாகாது.

| | ரூ. ச. |
|---|---|
| மாடுகள் தலைக்கு .. .. .. | 1 0 |
| செம்மறியாடுகள் அல்லது வெள்ளாடுகள் தலைக்கு .. | 0 50 |

13. அறுப்புக்களம் ஒவ்வொன்றினதும் காப்பாளர் அறுப்புக்களத்தில் அறுக்கப்பட்ட ஒவ்வொரு மிருகம் சம்பந்தமான விபரங்களைக் கொண்ட ஒரு பதிவேட்டை சபை பணிக்கக்கூடிய அத்தகைய் படிவத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

14. சௌக்கிய வைத்திய உத்தியோகத்தருக்கு இந்த ஒழுங்கு விதிகளினுல் வழங்கப்பட்டிருக்கும் தத்துவங்கள், அத்தகைய சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரின் பொது அல்லது விசேட பணிப்புரையின் கீழ் செயலாற்றும் எந்த உத்தியோகத்தரினுலும் பிரயோகிக்கப்படலாம்.

15. இவ்வொழுங்குவிதிகளில்—

"தலைவர்" என்பது சபைத் தலைவர் எனப் பொருள்படும், அத்துடன்

"சபை" என்பது பத்தேகம கிராம சபை எனப்பொருள்படும்.

10–687—19.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 82

---

எல். டி.—பீ 22/53

மின்சக்திச் சட்டம்

1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியாயம்) மின்சக்தி பற்றிய சட்டத்தின் 46 ம் பிரிவின் கீழும், நீர்ப்பாசன, மின்சக்தி பெருந்தெருக்கள் அமைச்சரைக் கலந்தாலோசித்த பினனர் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டலுவல் அமைச்சர் அளித்த அங்கீகாரத்துடனும் வறக்காப்பொல பட்டினசபையால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

டீ. இர்ாசேந்திரா,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 5 ந் வ.

ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகளில்—

"சட்டம்" எனில் 1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியாயமாம்) மின்சக்திச் சட்டம் எனப் பொருள்படும்.

"உத்தரவுப்பத்திரம்" எனில் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ் வறக்காப்பொலப் பட்டின சபைக்கு வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரம் எனப் பொருள்படும்.

"உத்தரவுப்பத்திரக்காரர்" எனில் வறக்காப்பொலப் பட்டின சபை எனப் பொருள்படும்.

2. உத்தரவுப்பத்திரகாரரிடமிருந்து மின்சக்தி பெற விரும்பும் எவரும்—

(1) விநியோகம் தேவைப்படுவதற்குக் குறைந்தது பதினைன்கு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வழங்கும் படிவத்தில் உத்தரவுப்பத்திரக்காரருக்கு விண்ணப்பஞ் செய்ய வேண்டும் ; மேலும்

(2) வழங்கு கம்பிகளுக்கான செலவுகளை உத்தரவுப்பத்திரக்காரருக்கு முற்பணமாகச் செலுத்த வேண்டும், அல்லது உத்தரவுப் பத்திரதாரர் அவ்விதங் கேட்டால், சட்டத்தின் 33 ம் பிரிவின் கீழ் உத்தரவுப்பத்திரதாரருடன் எழுத்திலான ஒரு ஒப்பந்தமும் செய்தல் வேண்டும்.

(3) (அ) உத்தரவுப்பத்திரகாரரின் மின்சக்தி வழங்கு மூலக் கம்பிகளுடன் இணைக்கக் கருதியுள்ள நிறுப்பு எதனதும் கம்பியிடும் வேலையை மின்னேந்திரவியற் பொறியியலாளர் கழகத்தினுல் விதிக்கப்பட்ட கம்பியிடுதல் பற்றிய ஒழுங்கு விதிகளுக்கமைய அவ்வேலையைச் செய்து முடிக்கக்கூடிய திறமையுள்ள ஒரு தொழிற்ருபனத்திடம் அல்லது தனியார் ஒருவரிடம் பாவனையாளர் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வேலையை உத்தரவுப் பத்திரக்காரரினுல் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் பரிசோதித்து, பரீட்சித்துப் பார்த்த பின்னரும், அவ்வேலை முன்னே சொல்லப்பட்ட கம்பியிடுதல் பற்றிய ஒழுங்கு விதிகளுக்கமைவாகச் செய்யப்பட்டுள்ளதென் உத்தரவுப்பத்திரகாரர் திருப்தியடைந்த பின்னரும் மாத்திரமே அந்நிறுப்புக்கு மின்சக்தி விநியோகம் இணைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அந்நிறுப்பு சொல்லப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைவாக இல்லாவிட்டால் அந்நிறுப்பு அவ்வொழுங்கு விதிகளுக்கமைய அமைக்கப்படும் வரையில் அம்மனையகத்துக்கு மின்சக்தி விநியோகம் செய்யப்படமாட்டாது.

4. மின்சக்தி உபயோகிக்கும் ஒவ்வொருவரும் அம்மின்சக்திக்காக உத்தரவுப்பத்திரத்தில் விவரிக்கப்பட்ட விகிதத்தில் பணம் செலுத்தல் வேண்டும்.

5. (அ) பாவனையாளரின் மனையகத்தில் இருக்கும் சேவை வடக்கம்பிகளின் பாகமும் அம்மின்மாற்றியும், பிரதான பியூஸ்களும், மானியும் தாங்கு பலகையும் உத்தரவுப்பத்திரகாரரின் சொத்துக்களாகவே இருக்கும். எக்காரணத்தைக் கொண்டும் உத்தரவுப்பத்திரக்காரரினுல் அதிகாரமளிக்கப்பட்ட அவரது ஊழியரல்லாத எவரும் அவற்றை அகற்றவோ அல்லது தலையிடவோ கூடாது.

(ஆ) பாவனையாளரின் புறத்தில் இருக்கும் உத்தரவுப்பத்திரகாரரின் பிரதான பியூஸ், மானி ஆகியவற்றின் கம்பிகள், வடக்கம்பிகளையும் வேறு உபகரணங்களையும் பராமரிப்பது பாவனையாளரின் பொறுப்பாகும்.

(இ) சட்டத்தின் 47 (3) ம் பிரிவின்படி துணிக்கப்பட்ட நிறுப்பு ஏதும் மீண்டும் இணைக்கப்பட்டால், அந்நிறுப்பை பரிசோதித்து மீண்டும் இணைப்பதற்குரிய சலார், உத்தரவுப்பத்திரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அறவிடப்படும். அதனைப் பாவனையாளர் முற்பணமாகச் செலுத்திவிடல் வேண்டும்.

(ஈ) எப்பாவனையாளரதும் கம்பிகளின் அல்லது பொருத்துகளின் சில பாகங்களின் ஒழுங்கு இருக்கும் பட்சத்தில், தமது மனையகத்தின் மானி காட்டும் சக்திச் செலவு யாவற்றுக்கும் மின்சக்திச் சட்டத்தின் 41 ம் பிரிவிற்கிணங்க அவர் பணஞ் செலுத்தப் பாத்திரராவார்.

6. (அ) தமது மனையகத்துக்கு மின்சக்தி வழங்கப்பட்ட பின்னர், ஏற்கனவே உபயோகித்துவந்ததைவிடப் பெரிய அளவான எந்த விளக்கையும் விசிறியையும் அல்லது மோத்தரையும் உபயோகித்த அல்லது மேலதிகமாக விளக்கெதையும் அல்லது மின்சக்தியைச் செலவிடும் உபகரணம் எதையும் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பொருத்தவோ அல்லது தமது மனையகத்தில் பொருத்தப்பட்டுள்ள கம்பிகளை மாற்றவோ அல்லது விஸ்தரிக்கவோ விரும்பும் பாவனையாளர் ஒவ்வொருவரும், அப்படியான வேலை ஆரம்பிப்பதற்குக் குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(ஆ) முன்பிருந்ததைவிடப் பெரிய விஸ்தரிப்பு, விளக்கு விசிறி அல்லது மோத்தர் எதனையும் அல்லது மேலதிக விளக்கு அல்லது சக்தியைச் செல்விடும் வேறு உபகரணம் எதையும் அவ்வித விஸ்தரிப்பு, விளக்கு, விசிறி, மோத்தர், மேலதிக விளக்கு அல்லது வேறு உபகரணத்தை உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் பார்வையிட்டுச் சோதித்துத் திருப்திப்படாதவரையில் எப்பாவனையாளரும், தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவேனும் பிரதான நிறுப்புடன் இணைக்கவோ இணைக்கச் செய்யவோ அல்லது நிறுவவோ கூடாது.

7. (அ) எவ்விட்டிலும் உத்தரவுப்பத்திரக்காரரின் பியூஸ் உருகிப் போகும் பட்சத்தில் பாவனையாளர் உடனடியாக உத்தரவுப்பத்திரகாரருடைய விசைநிலைய அல்லது சகவிசை நிலைய, அவ்வதற்கேற்றவாறு பொறுப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

(ஆ) உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் அல்லது வேலையாள் ஒவரையும் தவிர்ந்த வேறெவரும் உத்தரவுப்பத்திரக்காரரின் சொத்தான உருகிப்போன பியூசை மாற்றக் கூடாது.

(இ) பாவனையாளருக்கு அல்லது உத்தரவுப்பத்திரக்காரருக்குச் சொந்த மான் மியூஸ் எதனையும் மாற்றுவதற்காக உத்தரவுப்பத்திரக்காரருடைய உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரதும் உதவி அவசியப்பட்டால், உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறான கட்டணம் ஒன்று பாவனையாளரின் அந்த மாதக் கணக்கில் சேர்க்கப்படும்.

8. வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் முழு அல்லது பகுதி சக்தி விநியோகத்தடைப்பாட்டினால் உண்டாகும் நஷ்டம் அல்லது சேதம் எதற்கும் உத்தரவுப்பத்திரக்காரர் பாவனையாளருக்குப் பொறுப்பாளியாகமாட்டார்.

9. சட்டத்தின் 45 ம் பிரிவின்படிக்குத் துணிக்கப்பட்டிருந்தபின் ஒரு நிறுப்பு மீண்டும் இணைக்கப்படுமாயின், சோதித்து மீளவும் இணைப்பதற்காக உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறான ஒரு கட்டணத்தைப் பாவனையாளர் முற்பணமாகக் கொடுத்துவிட வேண்டும்.

10. (அ) கணக்குக் கொடுக்கப்பட்ட திகதியன்றே சகல கட்டணங்களும் கொடுபட வேண்டியனவாகக் கருதப்படும்.

(ஆ) ஒரு கணக்கில் பிழையிருப்பதாகச் செய்யப்படும் முறைப்பாடு எதுவும் பாவனையாளருக்குக் கணக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கிழமைக்குள் செய்யப்படாவிட்டால் உத்தரவுப்பத்திரக்காரர் அதனை ஏற்கமாட்டார்.

11. (அ) தனது வீட்டுக்கு மின்சக்தி விநியோகம் தேவைப்படாத பாவனையாளர் ஒவ்வொருவரும் உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுத்தில் மூன்று முழு நாளைய அறிவித்தல் கொடுக்க வேண்டும்.

(ஆ) (அ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்படாத விடத்துத் தனது வீட்டிலுள்ள உத்தரவுப்பத்திரக்காரரின் உபகரணங்களுக்குப் பாவனையாளர் பொறுப்பாளியாக இருப்பதுடன், பாவனையாளருக்கு அவ்விநியோகம் தேவையில்லையென உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கிடைத்த தினத்திலிருந்து மூன்று நாட்களுக்கு அவ்வீட்டில் செலவாகிய சக்தி முழுவதற்கும் பணஞ் செலுத்துதற்குப் பொறுப்பாளியாக இருப்பார். எனினும், சொல்லப்பட்ட மூன்று நாட்கள் கடக்கு முன்னர் உத்தரவுப்பத்திரக்காரரால் விநியோகம் துணிக்கப்பட்டால் துணிக்கப்பட்ட நேரம் வரைக்கும் அவ்வீட்டில் செலவான மின்சக்திக்கு மாத்திரமே பாவனையாளர் பணம் செலுத்தப்பாத்திரராவார்.

12. இருந்து வரும் இணைப்புகளுக்குச் சேர்த்தல், மாற்றுதல், செம்மைப்படுத்தல் உட்பட்ட மின்சார இணைப்பு வேலை எதனையும் தொடங்குதற்கு இரண்டு நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் ஒன்றை உத்தரவுப்பத்திரக்காரருக்குக் கொடுத்து உத்தரவுப்பத்திரக்காரரின் ஒரு உத்தியோகத்தர் உத்தேச வேலையைப் பரிசோதிக்க வாய்ப்பளிக்காது தொடங்கக்கூடாது.

13. உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கொடுத்து அவரது முன்னங்கீகாரத்தைப் பெறாது எம்மனையகத்திலும் புதிய இணைப்பு எதற்கும் மின்சார வேலை செய்யப்படின் உத்தரவுப்பத்திரக்காரருக்கு முறைப்படியான அறிவித்தல் கிடைத்து அவசியமான பரிசோதனைகள் செய்யப்படுகின்றவரை, அத்தகைய வேலை செய்யப்பட்டுள்ள மனையகத்திற்கு மின்சக்தி வழங்குதற்கு உத்தரவுப்பத்திரக்காரர் மறுக்கலாம்.

14. உத்தரவுப்பத்திரக்காரரின் மின்சார விநியோக மூலக் கம்பிகளோடு ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள நிறுப்பு எதற்கும், உத்தரவுப்பத்திரக்காரருக்கு முன்னறிவித்தல் கொடுத்து அனுமதி பெறாமல் விஸ்தரிப்பு எதும் செய்யும் பட்சத்தில் அந்நிறுப்பு முற்றாக உத்தரவுப்பத்திரக்காரருடைய மின்சார விநியோக மூலக்கம்பிகளிலிருந்து துண்டிக்கப்படப் பாத்திரமானதாகும்.

15. எந்த நிறுப்பையும் மீண்டும் இணைப்பதற்காக விண்ணப்பம் ஒவ்வொன்றும் உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வைத்துள்ள படிவத்தில் செய்யப்பட்டு மின்சக்தி தேவைப்படுவதற்கு நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குக் குறையாத காலத்துள் உத்தரவுப்பத்திரக்காரரின் காரியாலயத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

10–738—19.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 82

---

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

17 ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 ன் 60 ம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபையின் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 257), 17 (5) ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு கனநாயகம் நல்லைநாதன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் ஆகிய நான் இந்த அட்டவணையில் பத்தி 1 ல் குறிக்கப்பட்டுள்ள கிராமசபையின் கூட்டத்தை அந்த அட்டவணையிற் பத்தி 2 ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அந்த அட்டவணையிற் பத்தி 3 ல் உள்ள பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையில் பத்தி 4 ல் குறிப்பிட்ட இடத்தில் கூட்டுகின்றேன்.

க. நல்லைநாதன்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சிப் பணிமனை,
யாழ்ப்பாணம், 1973 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 6 ந் வ.

**அட்டவணை**

| பத்தி 1 கிராமச் சபையின் பெயர் | பத்தி 2 திகதி | பத்தி 3 நேரம் | பத்தி 4 இடம் |
|---|---|---|---|
| காரைநகர் வடக்கு | 27.10.73 .. | மு.ப. 9.30 மணி .. | கிராமச் சபை பணிமனை காரைநகர் வடக்கு |

10–588—19.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 82

---

# பதவிகள் — வெற்றிடம்

***“இலங்கைக் குடியாசு வர்த்தமானப் பத்திரிகை” யின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்***

**படிகள்.**—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.

2. **சேவை நிபந்தனைகள்.**—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச்சேவை அதிகாரச் சட்டத்திற்கும், உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் எதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.

3. **நியமன விதிகள்.**—(அ) உ. ஆ. சேவையில் மாதாந்தச் சம்பளம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் உ. ஆ. சே. சகாயநிதிக்கு கட்டுப்பணம் செலுத்தவேண்டும். ஊழியர் தமது திரட்டிய வேதனத்தில் 6 சதவீதத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுவார். ஊழியர் நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றம், அவர் பொருட்டு இந்நிதிக்கு அவரது திரட்டிய வேதனத்தின் 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின் படி விடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும். உள்ளூராட்சிச் சேவையில் ஒரு இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவியை வகிக்கும் எந்தவொரு ஊழியரும், அச்சேவையில், வேறொரு இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிக்கு அவர் பதவியுயர்த்தப்பட்டால் அல்லது நியமிக்கப்பட்டால், அவர் நியமிக்கப்பட்ட அல்லது பதவியுயர்த்தப்பட்ட புதிய பதவியிலும் அவர் தொடர்ந்து இளைப்பாற்றுச்சம்பள உரிமைகளைப் பெறுவார்.

(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும் போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தவர்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(ஈ) உள்ளூராட்சிச் சேவையில், மாதாந்த வேதனம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு, விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம் பொருந்தமாட்டாது. எவ்வாறாயினும் பெண்களும் 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேர்ந்த தேதியில், அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிகளை வகித்தவர்களும் தவிர, உ. ஆ. சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவி ஒன்றிலிருந்து அச்சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் அல்லது பதவியுயர்த்தப்படுபவர்கள் 1952 ம் ஆண்டு ஜூலை 30 ந் திகதி வெளியான 10,329 இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட, 1952 ம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப்பிரமாணங்களின்படி, ஸ்தாபிக்கப்பட்ட உ. ஆ. சே. விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச்சம்பள நிதிக்கு, தங்களது கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சி மன்றம், கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(உ) நியமிக்கப்படுபவர்கள் குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(ஊ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(எ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றாண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.

(ஏ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச்சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(ஐ) நியமிக்கப்படுபவர்கள் தீவின் எப்பகுதியிலாயினும் சேவை செய்தல் வேண்டும்.

**4. உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றி சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின் " தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.

(2) புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்துவதற்கு ஏதுவாக 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும் அமைந்தொழுகுவார்களென்ற நிபந்தனைகளுக்குட்படல் வேண்டும்.

(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.

(4) தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட கால வரையறைக்குள் க. பொ. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலைவரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும். குறிக்கப்பட்ட காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதனப் பெருக்கங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

(5) **கல்வியும் ஏனைய தகைமைகளும்.**—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்கு சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக் குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற, சிங்களப் பரீட்சார்த்தி சிங்கள பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

**குறிப்பு.**—(1) சிங்களமொழி மூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமைபெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

**குறிப்பு.**—(2) இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது அரசகரும மொழிக்கொள்கையின் நோக்கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்

**குறிப்பு.**—(3) 4 (3) ஆம், (4) ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன்சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். " இலங்கையர் " என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

**6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை.**—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில் தமது வயதுகளிலிருந்து கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படைவீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

**7. வயதுச்சலுகை.**—இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தரப் பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும்பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

**8. வேண்டற்பால ஏனையவை.**—(1) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகரசபை ஆணையாளர் அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா ? இல்லையா ? என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும், நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

(4) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும் ; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) " கீழே இணைக்கப்பட்ட படிவத்தில் " விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகி விட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

### வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப்பத்திரம்

### உள்ளூராட்சிச் சேவை

**முக்கியமாகக் கவனிக்க.**—(1) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலிற் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 530, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்யுமுன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றனர். விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி, உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் கட்டணங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.—(1) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (2) குணச் சான்றிதழ், (3) பதவி அத்தகைய தன்மைய்தாயின் உயர் தொழில்/தொழில்நுட்பத் தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ணப்பகாரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

.........................(..........) **பதவிக்கான விண்ணப்பம்**

1 (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி :————.

(ஆ) ......................... பதவிக்கான விண்ணப்பம்.

2. முழுப்பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :————.
தேசியஇனம் :————.

(மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா ? இலங்கையரல்லாதவரா ? என்பதைக் கூறுக. நீர் பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக)

3. தபால் விலாசம் :————.
(விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியில் சரியான வயது :—

————வருடங்கள்————மாதங்கள்————நாட்கள்

(ஆ) பிறந்த திகதி :— வருடம் :————.
மாதம் :————. திகதி :————.

5. பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பகாரர் :————.

(ஆ) அவரது பிதா :————.

(இ) அவரது பிதாவழிப் பேரன் :————.

(ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் :————.
(விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்.)

6. விவாகமானவரா ? தனியாளரா ? அல்லது தாரமிழந்தவரா ? கைம்பெண்ணா ? :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :—

| பொதுக் கல்வி | | | உயர் தொழில்/தொழில் நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1 ................ | ...... | ...... | 1 ............ | ...... | ...... |
| 2 ................ | ...... | ...... | 2 ............ | ...... | ...... |
| 3 ................ | ...... | ...... | 3 ............ | ...... | ...... |
| 4 ................ | ...... | ...... | 4 ............ | ...... | ...... |
| 5 ................ | ...... | ...... | 5 ............ | ...... | ...... |

8. கல்வித் தகைமைகள் :—

(அ) சி.பா.த. பத்திரம்/க.பொ.த.ப.(சாதாரண தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| முதல் தடவை | | | | | |
| இரண்டாம் தடவை | | | | | |

(ஆ) க.பொ.த.ப. (உயர்தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

(இ) வேறும் கல்வித் தகைமைகள் :—

| பரீட்சையின் பெயர் | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ஈ) கீழ உள்ளவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :—

1. சிங்களம் :————.
2. தமிழ் :————.
3. ஆங்கிலம் :————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக :————.

10. உயர்தொழில்/தொழிநுட்ப/தொழில் அனுபவங்கள் :—

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி வகிக்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றைவிட்ட திகதிகளுடன் தருக):—

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக :————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :————.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :————.

(3) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? :————

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப் பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் :————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும் தேர்ச்சியுண்டா? :—
(அ) சிங்களம் :————.
(ஆ) தமிழ் :————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டெனில், அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக :————.

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக :————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர்? :————.

16. வேறு ஏதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) :————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்றவேண்டியதில்லை) :————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக் காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச் செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.
செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை
தபால் பெட்டி 530, கொழும்பு 1.

---

உள்ளூராட்சிச் சேவை

நீர்வேலைகள் எந்திரி பதவி—மாநகரசபை, கொழும்பு

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையால் கோரப்படுகின்றன.

2. இப்பதவிக்குரிய வருடாந்த வேதனம் ரூபா 17,640—4 × 600—20,040.

3. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர்கள் எம். ஐ. சி. ஈ பட்டமும் எம். ஐ. டபிள்யூ. ஈ பட்டமும் பெற்றிருப்பதுடன் நிர்வாக அனுபவத்துடன் மேற்படி நீர்வேலைகள் அமைப்பதிலும், தாபரிப்பதிலும், ஆழ்ந்த அனுபவம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

4. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் IV வது பகுதியில் உள்ள உள்ளூராட்சிச் சேவைப் பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் நிரப்பியனுப்பப்பட வேண்டும். 1973.11.20 திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும்.

6. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான தொடர்புகளும் உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டுமேயன்றி, இத் திணைக்களத்திலுள்ள எந்த ஒரு உத்தியோகத்தருக்கும் நேரிடையாக அனுப்பப்படக்கூடாது.

7. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர் அல்லது மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அவர்கள் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபாரசு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எட்கா பர்னந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 08 ந் உ.

10-594—19.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 82

---

உள்ளூராட்சிச் சேவை

கொழும்பு மாநகர சபை, பிரதான எந்திரி பதவி (வேலைத்தலம்)

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உ. ஆ. சே. அ. சபையால் கோரப்படுகின்றன.

2. இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் வருடாந்தம் ரூபா 17,640—4 × 600—ரூபா 20,040 மணமானவர்களுக்கு அரசாங்க விதிகளன் நிபந்தனைகளுக்கேற்ப ஒரு திருமணப்படியும் வழங்கப்படும்.

3. **வேண்டிய தகைமைகள் :**

(அ) வயது 1972.11.20 தேதியில் விண்ணப்பதாரர்களுக்கு வயது 45 க்கு மேற்படக்கூடாது.

(ஆ) **உயர்தொழிலுக்குரிய தகைமைகள்** : விண்ணப்பதாரர்கள் எம். ஐ. (பொறிமுறை) (இலண்டன்) அல்லது எம். ஐ. ஈ. (இலங்கை), அத்துடன் மின்சார மோட்டார்க் கார் எந்திர வியலில் குறைந்தது 10 வருட நிர்வாக அனுபவமும் இருத்தல் வேண்டும். அல்லது ;

அவர்களுக்கு எம். ஐ. ஈ. ஈ. (இலண்டன்) அல்லது எம். ஐ. ஈ. (இலங்கை)யுடன் பொறிமுறை மோட்டார் கார் எந்திரவியலில் குறைந்தது 10 வருட நிர்வாக அனுபவமும் இருத்தல் வேண்டும்.

4. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் IV வது பகுதியில் உள்ள உள்ளூராட்சிச் சேவைப் பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. உள்ளூராட்சிச் சேவையின் நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்களை நிரப்பியனுப்பப்பட வேண்டும். 20.11.1973 ற்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும்.

6. விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக் கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களை அல்லது மாநகர சபை, ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபாரசு செய்தாலன்றி அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எட்கா பர்னந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 08 ந் உ.

10-595—19.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 82

# துணைவிதிகள்

## நகரசபைகள் கட்டளைச்சட்டம்

(255 ம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் திருகோணமலைப்பட்டினத்து விசேட ஆணையாளரினால் ஆக்கப்பட்டவையும் அக்கட்டளைச்சட்டத்தின் 154 ஆம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டவையுமான துணைவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,

கொழும்பு, 1973.9.19

### துணைவிதி

28.6.57 இன் 1137 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானத்தின்மூலம் திருகோணமலை நகரசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத் துணைவிதிகள் 16 ஆம் பாகத்தின் 4 வது துணைவிதியின் நோக்கத்திற்காக, இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களின்படி கடை இருக்கை அல்லது திறந்த வெளிக்கான வாடகை அல்லது கட்டணம் விதிக்கப்பட்டுள்ளன.

| | நாளொன்றுக்கான கட்டணம் ரூபா. ச. |
|---|---|
| 1. சந்தைக் கட்டிடத்தினுள் இருக்கும் நிரந்தமான கடை ஒவ்வொன்றுக்கும் .. .. | 1 50 |
| 2. தற்காலிகமான கடை ஒவ்வொன்றிக்கும் .. | 1 25 |
| 3. 10 சதுர அடிக்கு மேற்படாத சந்தைவளவுகளிலுள்ள ஒரு திறந்த வெளியின் கூறு ஒவ்வொன்றுக்கும் .. .. | 75 |
| 4. 10 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 20 சதுர அடிக்கு மேற்படாத சந்தை வளவுகளிலுள்ள ஒரு திறந்த வெளியின் கூறு ஒவ்வொன்றுக்கும் .. | 1 00 |
| 5. 20 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 25 சதுர அடிக்கு மேற்படாத சந்தை வளவுகளிலுள்ள ஒரு திறந்த வெளியின் கூறு ஒவ்வொன்றுக்கும் .. | 1 25 |

10—741—19.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 82

---

எல்டிபி 113/47

## கண்டி மாநகரசபை

மாநகர சபைகள் கட்டளைச்சட்டம்

(252 ம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 267, 272 (2) ஆகிய பிரிவுகளின் கீழ் கண்டி மாநகரத்தின் விசேட ஆணையாளரினால் ஆக்கப்பட்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 268 ம் பிரிவின் கீழ் தேசீய அரசுப் பேரவையினால் உறுதிப்படுத்தப்பட்ட துணைவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 29 ந் ஆ.

### கட்டடங்களின் மாதிரிப் படங்களைப் பரிசோதித்து கருத்திற்கொள்வது சம்பந்தமான துணைவிதிகள்

1. (268 ஆம் அத்தியாயமான) வீடமைப்பு, நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அங்கீகாரத்துக்கெனச் சமர்ப்பிக்கப்படும் புதிய கட்டடங்களுக்கான அல்லது ஏற்கனவே இருக்கும் கட்டடங்களுக்கு மாற்றங்கள் செய்வதற்கான விண்ணப்பங்களையும், மாதிரிப்படங்களையும், வரைவுப் படங்களையும், விவரக்கூற்றுக்களையும் பரிசோதிப்பதற்காகவும், கருத்திற்கொள்வதற்காகவும் இதனோடுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விகிதங்களின்படி தீர்மானிக்கப்படும் ஒரு கட்டணத்தைக் கட்டுதல் வேண்டும்.

2. (1) 1 வது துணைவிதியின் கீழ்க் கட்டவேண்டிய கட்டணத் தொகையைக் கண்டி மாநகரத்தின் விசேட ஆணையாளர் அதனைக் கட்டும்படி கேட்டு எழு நாட்களுக்குள், அங்கீகாரங்கேட்டு அல்லது சம்மதம் கேட்டு விண்ணப்பிப்பவர் கட்ட வேண்டும்.

(2) இத்துணைவிதியின் முந்திய பந்தியில் விதிக்கப்பட்ட காலத்துக்குள் அக்கட்டணத்தைக் கட்டத் தவறும் ஒவ்வொருவரும் ஒரு தவற்றைச் செய்தவராவதோடு குற்றத் தீர்ப்பு அளிக்கப்படுகையில் நூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணம் செலுத்தவும் ஆளாதல் வேண்டும்.

(3) துணைவிதிகளில் குறிப்பிடப்பட்ட கட்டணம் கட்டப்படும் வரை விண்ணப்பம், மாதிரிப்படம், வரைவுப்படம் அல்லது விவரக்கூற்று எதையும் பரிசோதித்து கருத்திற் கொள்ளலாகாது.

### அட்டவணை

1. புதிய கட்டணங்களுக்கான அல்லது ஏற்கனவேயுள்ள கட்டடங்களின் தளப்பரப்பை விஸ்தரிப்பதனை உட்படுத்தும் மாற்றங்களுக்கான மாதிரிப்படங்களுக்கு—

| | ரூ. ச. |
|---|---|
| (அ) மொத்தத் தளப்பரப்பு 600 சதுர அடிக்கு மேற்படாத விடத்து .. .. .. | 3 0 |
| (ஆ) மொத்தத் தளப்பரப்பு 600 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 1000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 7 0 |
| (இ) மொத்தத் தளப்பரப்பு 1000 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 3000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 20 0 |
| (ஈ) ஒவ்வொரு மேலதிகமான 1000 சதுர அடி கொண்ட கூறுக்கும் அல்லது அக்கூறின் பகுதிக்கும் .. | 5 0 |
| 2. தளப்பரப்பை விஸ்தரிப்பதனை உட்படுத்தாது, ஏற்கனவே இருக்கும் கட்டடங்களின் மாற்றங்களுக்கான மாதிரிப் படங்களுக்கு .. .. .. | 5 0 |
| 3. புதிதாக மாதிரிப்படம் எதையும் சமர்ப்பிக்காது அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதற்காய் விண்ணப்பமொன்றுக்கு .. | 10 0 |
| 4. கட்டட அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாந் தன்மையை நீடிப்பதற்கான விண்ணப்பமொன்றின் விடயத்தில் இவ்வட்டவணையில் " தளப்பரப்பு " என்பது நிலத்தளத்திலுள்ள அல்லது வேறெந்தத் தளத்தினுமுள்ள வெளி எனப் பொருள்படும் .. | 3 0 |

10–676—19.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 82

## குருநாகல் மாநகர சபை

### மாநகர சபைகள் கட்டளைச்சட்டம்

எல்டிபி 55/52

(252 ம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 267, 272 ஆகிய பிரிவுகளின் கீழ் குருநாகல் மாநகர சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 268 ம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 29 ந் வ.

1. இத்துணைவிதிகள் குருநாகல் பொதுச் சந்தைத் துணைவிதிகள் 1973, என எடுத்தாளம்படலாம்.

2. (1) 3 ம் பந்தி 3 இன் ஏற்பாடுகளுக்கமைய எவரும்

கடைகள், இடப்பரப்பு அல்லது தானியக்குடில்களுக்குரிய உத்தரவுப்பத்திரத்தையும் இடப்பரப்புகளை ஒரு மாதத்துக்கு மேற்படாத காலத்துக்கு உபயோகிப்பதற்குரிய அனுமதிப்பத்திரத்தையும் வழங்குதல்.

(அ) ஆணையாளரினால் அதன் சார்பில் உத்தரவுப்பத்திரமொன்று வழங்கப்பட்டு அவ்வுத்தரவுப்பத்திரம் நடைமுறையிலிருந்தாலன்றி ; அத்துடன்

(ஆ) 4 ம் துணைவிதியின் பிரகாரம் அத்தகைய கடைக்கான, இடப்பரப்பிற்கான அல்லது தானியக் குடிலுக்கான வாடகையை அல்லது கட்டணத்தை அவர் செலுத்தினாலன்றி

பொதுச் சந்தை எதிலுமுள்ள கடை, இடப்பரப்பு அல்லது தானியக்குடில் எதையும் உபயோகிக்கவோ ஆட்சிபுரியவோ கூடாது.

(2) (1) ம் பந்தியின் கீழ் எந்த ஆளுக்கும் வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரம் ஒவ்வொன்றும்—

(அ) இதனோடிருக்கும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும், அதீதுடன்

(ஆ) (i) அத்தகைய உத்தரவுப்பத்திரம் 29 ம் துணைவிதியின் கீழ் இல்லாதொழிக்கப்பட்டிருந்தாலன்றி, அல்லது

(ii) 3 ம் துணைவிதியினால் வேண்டப்படும் அறிவித்தலை கொடுத்த பின்னர் அத்தகைய ஆளினால் அக்கடையின் இடப்பரப்பின், அல்லது தானியக் குடிலின் உபயோகம் அல்லது ஆட்சி முடிவுறுத்தப்பட்டாலன்றி ; அல்லது

(iii) அவ்வுத்தரவுப்பத்திரத்தை வைத்திருப்பவர் (252 ம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 156 ம் பிரிவின் கீழ் பொதுச் சந்தையிலிருந்து வெளியேற்றப்பட்டாலன்றி அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து வழங்கப்பட்ட ஆண்டின் திசெம்பர் மாதத்து 31 ந் தேதி வரையும் நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

(3) ஆணையாளர் அல்லது ஆணையாளரினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் எவரும் எந்த ஆளுக்கேனும், பொதுச் சந்தை எதிலுமுள்ள இடமொன்றினை ஒரு மாதத்துக்கு மேற்படாத காலத்துக்கு அத்தகைய ஆளினால் உபயோகிப்பதற்கு அதிகாரமளித்து அனுமதிப்பரத்திரமொன்றினை வழங்கலாம். இப்பத்தியின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிபபத்திரத்துக்கும் 4 ம் துணைவிதியின் பிரகாரமான வாடகை அல்லது கட்டணமொன்று செலுத்தப்படல் வேண்டும்.

(4) இத்துணைவிதியின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரமொன்றினை வைத்திருப்பவர் அவ்வுத்தரவுப்பத்திரம் வழங்கப்பட்டதன் தொடர்பான கடையை, இடப்பரப்பை அல்லது தானியக்குடிலை அவர் வெற்ருக்கு வதன்மேல் அத்தகைய உத்தரவுப்பத்திரத்தை ஆணையாளரிடம் அல்லது ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் வேறெவரேனும் உத்தியோகத்தரிடம் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

3. உத்தரவுப்பத்திரமொன்றை வைத்திருக்கும் ஒவ்வொருவரும் தமது வாடகைக் குடியிருப்பை முடிவுறுத்துவதற்குத் தீர்மானிக்கும்போது அத்தகைய வாடகைக் குடியிருப்பைப் முடிப்பதற்கான தமது கருத்தைத் தெரிவிக்கும் அறிவித்தலொன்றினை ஒரு முழு மாதத்துக்கு முன்னர் ஆணையாளருக்குக் கொடுத்தல் வேண்டும் அல்லது அத்தகைய அறிவித்தலுக்குப் பதிலாக ஒரு மாத வாடகையைச் செலுத்தல் வேண்டும். வாடகைக் குடியிருப்பை முடிவுறுத்தும் அறிவித்தல்.

4. (1) ஒரு உத்தரவுப்பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் ஒவ்வொருவரும் சபையினால் நிர்ணயிக்கப்படும் விகிதங்களில் ஒரு வாடகையை அல்லது கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். வாடகைகள் அல்லது கட்டணங்கள்.

(2) பொதுச்சந்தையொன்றிலுள்ள கடை, இடப்பரப்பு அல்லது தானியக்குடில் ஒவ்வொன்றுக்குமான வாடகை அல்லது கட்டணம் (3) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில் ஆணையாளருக்கு அல்லது அத்தகைய வாடகையைச் சேகரிப்பதற்குச் சபையால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு செலுத்தப்படல் வேண்டும்.

(3) அத்தகைய வாடகை அல்லது கட்டணம்—

(அ) உத்தரவுப்பத்திரம் விடயத்தில் அது வழங்கப்படும் சமயத்தில் அல்லது அந்த உத்தரவுப்பத்திரம் வழங்கப்படும் காலத்தின்போது ஒவ்வொரு முழு மாதத்தின் முதல் தினத்தன்று மாதாந்தத் தவணைப் பணங்களில் ;

(ஆ) அனுமதிப்பத்திரம் விடயத்தில் அது வழங்கப்படும் சமயத்தில் செலுத்தப்படல்வேண்டும்.

**உத்தரவுப்பத்திரங்களை அல்லது அனுமதிப்பத்திரங்களை மாற்ற முடியாமையும் கடைகளை இடப்பரப்புக்களை அல்லது தானியக் குடில்களை உப வாடகைக்கு விடுதலும் உபயோகித்தலும் சம்பந்தமான ஏற்பாடுகளும்.**

5. (1) ஒரு உத்தரவுப்பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் எவரும் ஆணையாளரின் எழுத்திலான அனுமதியின்றி—

(அ) அத்தகைய உத்தரவுப்பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வேறெந்த ஆளுக்கேனும் மாற்றல் ; அல்லது

(ஆ) அவருக்கு ஒதுக்கப்பட்ட கடை, இடப்பரப்பு அல்லது தானியக்குடிலின் எப்பகுதியையும் உப வாடகைக்கு விடல் ; அல்லது

(இ) உத்தரவுப்பத்திரத்தில் அல்லது அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரைக் கொண்டவரும் மாநகர சபை அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்ட பெயரைக் கொண்டவருமான வேலையாள் அல்லது முகவர் ஒருவரைத் தவிர வேறெந்த ஆளையேனும் கடையின், இடப்பரப்பின் அல்லது தானியக்குடிலின் எப்பாகத்தையும் உபயோகிப்பதற்கு அல்லது ஆட்சிபுரிவதற்கு அனுமதித்தல் ஆகாது.

(2) ஆணையாளரின் எழுத்திலான அனுமதியின்றி எவரும் மாற்றம் அல்லது உபகுத்தகை எதன் மேலும், பொதுச் சந்தையொன்றிலுள்ள கடை, இடப்பரப்பு அல்லது தானியக்குடில் எதையும் அல்லது அதன் கண்ணுள்ள பகுதி எதையும் உபயோகித்தல் அல்லது ஆட்சிபுரிதலாகாது.

**கடையின் இடப்பரப்பின், அல்லது தானியக்குடிலின் எல்லைகளுக்கப்பால் ஆட்சிபுரிதல் தடைசெய்யப்பட்டுள்ளது.**

6. உத்தரவுப்பத்திரம் அல்லது அனுமதிப்பத்திரம் ஒன்றை வைத்திருப்பவர் அல்லது அவருடைய முகவர் அல்லது வேலையாள் தமது உத்தரவுப்பத்திரம் அல்லது அனுமதிப்பத்திரத்தின் கீழ் உபயோகித்தற்கு அல்லது ஆட்சிபுரிவதற்கு அதனை வைத்திருப்பவருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் கடையை, இடப்பரப்பை அல்லது தானியக்குடிலைத் தவிரப் பொதுச் சந்தையொன்றின் வேறெப் பகுதியையும் உபயோகிக்க அல்லது ஆட்சிபுரியக்கூடாது.

**கடையின் இடத்தின் அல்லது தானியக்குடிலின் எல்லைகளுக்கப்பால் எப்பொருளும் நீண்டிருக்கக் கூடாது.**

7. பொதுச் சந்தை எதிலுமுள்ள கடை, இடப்பரப்பு அல்லது தானியக்குடில் எதிலும் ஆட்சிபுரிபவர், அத்தகைய கடையில், இடப்பரப்பில், அல்லது தானியக்குடிலில் விற்பனை செய்தற்காக வைத்திருக்கப்படும் எப்பொருளையும் அத்தகைய கடையின், இடப்பரப்பின் அல்லது தானியக்குடிலின் எல்லைகளுக்குப் பால் நீண்டிருக்கச்செய்விக்க அல்லது அனுமதிக்கக் கூடாது.

**குப்பைகூழங்களைப் போடுவதற்கான கொள்கலங்கள் வைத்திருக்கப்படல்.**

8. (1) ஒரு உத்தரவுப்பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் ஒவ்வொருவரும் ஆணையாளர் நிர்ணயிருக்கும்வாறுன அத்தகைய வகையிலும் அளவிலுமான கொள்கலமொன்றைத் தனது கடையில், இடப்பரப்பில் அல்லது தானியக்குடிவில் வைத்திருக்க வேண்டுமென்பதுடன், அங்குள்ள குப்பை, கூழம், கழிவுப்பொருட்கள் அனைத்தையும் அதில் இடுதல் வேண்டும் அல்லது இடச் செய்வித்தல் வேண்டும்.

(2) ஒரு உத்தரவுப்பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் எவரும் அல்லது அதனை வைத்திருப்பவரின் முகவர் அல்லது வேலையாள் எவரும் மிருகங்களின் எலும்புகள், தோல்கள், மீன்துடுப்புகள், செதில்கள் எதையும், அல்லது கழிவுப்பொருட்கள் அல்லது குப்பை கூழங்கள் எதையும் சந்தைவளவின் வடிகால் எதற்குள்ளும் அல்லது வேறெந்தப் பதிகுயிலும் வீச அல்லது வீசுவிக்கச் செய்யக்கூடாது.

**சந்தை வளவுக்குள் கழுவுதல் தடை செய்யப்பட்டுள்ளது.**

9. ஒரு உத்தரவுப்பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் எவரும் அல்லது அதனை வைத்திருப்பவரின் முகவர் அல்லது வேலையாள் எவரும் சந்தை வளவில் அந்நோக்கத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஓரிடத்தைத் தவிர்ந்த வேறெந்தப் பகுதியிலும் இறைச்சி, மீன் அல்லது காய் கறிகள் எதையும் அல்லது வேறேந்தப் பொருளையும் கழுவ, நறுக்க அல்லது துப்பரவு செய்ய அல்லது கழுவுவிக்க, நறுப்பிக்க அல்லது துப்பரவு செய்விக்கக்கூடாது.

**கடைகள், இடப்பரப்புக்கள், தானியக் குடில்கள் ஆகியன பெருக்கப்படலும் வாங்குகள், மேசைகள் முதலானவை துப்பரவாக வைத்திருக்கப்படல்.**

10. ஒரு உத்தரவுப்பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் ஒவ்வொருவரும்—

(அ) தம்மால் ஆட்சிபுரியப்படும் கடை, இடப்பரப்பு, அல்லது தானியக் குடிலையும் தமது கடைக்கு, இடப்பரப்புக்கு அல்லது தானியக் குடிலுக்குச் செல்லும் வழியாக அமைந்திருக்கும் திறந்த வெளி எதையும் அல்லது வாசலையும் தினசரி பெருக்குதல் அல்லது பெருக்குவித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) விற்பனைக்குரிய உணவுப்பொருட்களது பானங்கள் ஆகியவை வைக்கப்பட்டிருக்கும் அல்லது வெளிக்காட்டப்பட்டிருக்கும் வாங்கு, தட்டற்றி, பீடம், அல்லது மேசை ஒவ்வொன்றையும் தினசரி நன்ருக்த் துப்பரவாக்கச் செய்ய வேண்டுமென்பதுடன் விற்பனைக்குரிய மீன் அல்லது இறைச்சி வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பலகையையும் தினசரி வழித்துக் கழுவுதல் வேண்டும்.

**இறைச்சிக் கடையின் இலக்கத்தையும் இறைச்சிவிலைகளையும் கொண்ட பலகை பார்வைக்கு வைக்கப்படல்.**

11. கடை எதிலும் இறைச்சி எதையும் விற்பனை செய்வதற்கு அதிகாரமளிக்கும் உத்தரவுப் பத்திரமொன்றை வைத்திருப்பவர் அக்கடையின் இலக்கத்தையும் அத்தகைய இறைச்சியின் நடப்பு விலையையும் கொண்ட பலகையொன்றினை அங்கு ஒரு துலாம்பரமான இடத்தில் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

**பண்ணைப்பறவைகள் அலைந்துதிரிதல் அனுமதிக்கப்படாமை.**

12. பண்ணைப் பறவைகளை விற்பனை செய்வதற்கு அதிகாரமளிக்கும் ஒரு உத்தரவுப் பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர் தமக்குச் சொந்தமான எந்தப் பறவையும் சந்தை வளவின் எந்தப் பகுதியிலும் அலைந்து திரிவதை அனுமதிக்கக்கூடாது.

**களவுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆட்கள் கடை எதிலும் ஆட்சிபுரிதல் அல்லது வேலைக்கமர்த்தப்படுதல் ஆகாது.**

13. (1) ஒரு உத்தரவுப்பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் எவரும் களவுக்காகக் குற்றத் தீர்பளிக்கப்பட்ட ஆள் எவரையும் தனது கடையில், இடப்பரப்பில் அல்லது தானியக் குடிலில் தனது முகவராக அல்லது வேலையாளராக வேலைக்கமர்த்தக்கூடாது.

(2) களவுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் எவரும் பொதுச் சந்தை எதிலுமுள்ள கடை, இடப்பரப்பு அல்லது தானியக்குடில் எதையும் ஆட்சி புரியக்கூடாது.

ஒட்டுநோய் எதனுலும் பீடிக்கப்பட்டிருக்கும் ஆட்களின் மீது மட்டுப்பாடுகள்.

14. ஒரு உத்தரவுப்பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் எவரும்—

(அ) சருமநோய், ஒட்டுநோய் அல்லது தொற்று நோய் எதனுலும் அவர் பீடிக்கப்பட்டிருக்கும் வேளையிலே தனது கடைக்குள், இடப்பரப்புக்குள், அல்லது தானியக்குடிலுக்குள் பிரவேசிக்க அல்லது அங்குள்ள விற்பனை எதிலும் பங்குபற்றக்கூடாது, அல்லது

(ஆ) சருமநோய், ஒட்டுநோய் அல்லது தொற்றுநோய் எதனுலும் பீடிக்கப்பட்டிருக்கும் எந்த ஆளேயேனும் தனது கடையில், இடப்பரப்பில் அல்லது தானியக் குடிலில் வேலைக்கமர்த்தல் அல்லது அத்தகைய கடையில், இடப்பரப்பில் அல்லது தானியக்குடிலில் உள்ள விற்பனையெதிலும் அத்தகைய ஆள் எவரையேனும் பங்கு பற்றுவதற்கு அனுமதிக்கக்கூடாது.

எள்ளனஞ் செய்தல், இடருண்டு பண்ணுதல், தொந்தரவு செய்தல் முதலானவை.

15. ஒரு உத்தரவுப் பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் எவரும் அத்துடன் அதனை வைத்திருப்பவரின் முகவர் அல்லது வேலையாள் எவரும் உத்தரவுப்பத்திரம் அல்லது அனுமதிப்பத்திரம் சம்பந்தமான கடைக்கு, இடப்பரப்புக்கு அல்லது தானியக்குடிலுக்கு அல்லது பொதுச் சந்தையின் எப்பகுதிக்கும் வருகின்ற எந்த ஆளையேனும் எவ்வகையிலும் எள்ளனத்துக்கு, இடருக்கு, தொந்தரவுக்கு அல்லது தாமதத்துக்கு உட்படுத்தக்கூடாது.

நெருப்பும் விளக்குகளும்.

16. ஒரு பொதுச்சந்தையிலுள்ள கட்டடம், கடை, இடப்பரப்பு, அல்லது தானியக்குடில் எதனதும் வாடகைக் குடியிருப்பாளர், ஆட்சியர்ளர் அல்லது அந்த வாடகைக்குடியிருப்பாளரின் அல்லது ஆட்சியாளரின் அல்லது ஆட்சியாளரின் வேலையாள் ஒவ்வொருவரும் அத்தகைய கட்டடம், கடை, இடப்பரப்பு அல்லது தானியக் குடிலிலுள்ள நெருப்பு அல்லது விளக்கு ஒவ்வொன்றையும் அத்தகைய கட்டடம், கடை இடப்பரப்பு அல்லது தானியக்குடிலிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் அணைக்க அல்லது அணைப்பிக்கச்செய்ய வேண்டுமென்பதுடன் அத்தகைய வாடகைக் குடியிருப்பாளர், ஆட்சியாளர் அல்லது வேலையாள் எவரேனும் அத்தகைய கட்டடத்தின், கடையின், இடப்பரப்பின் அல்லது தானியக் குடிலின் பாதுகாப்புக்கு ஆபத்து விளைவிக்கும் நெருப்பு அல்லது விளக்கு எதையும் எரிப்பிக்க அல்லது பற்றுவிக்கச் செய்ய அல்லது அனுமதிக்கக்கூடாது.

சந்தை வளவுக்குள் சமைத்தல், மது போதையிலிருத்தல், இரத்தல், காரணமின்றி உலாவுதல், தடை செய்யப்பட்டுள்ளன.

17. எவரும் பொதுச் சந்தைக்குள் அல்லது அதன் வளவுக்குள்—

(அ) சபையினுல் அந்நோக்கத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில், அத்தகைய இடம் சபையால் அங்கீகரிக்கப்படக் கூடிய அத்தகைய வகையான அடுப்பு ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றைக் கொண்டிருந்தால் தவிர, வெறெவ்விடத்திலும் சமையல் எதையும் மேற்கொள்ள ; அல்லது

(ஆ) மது போதையிலிருப்பதாக அல்லது ஒழுங்கீனமான முறையில் நடந்து கொள்வதாக அல்லது ஏதேனும் சத்தத்தை அல்லது குழப்பத்தை உண்டுபண்ணுவதாக அல்லது வேறெந்த ஆளுடனும் சண்டையிடுவதாக அல்லது எள்ளனமான, இகழ்வான அல்லது இடக்கரான மொழியை உபயோகிப்பதாக் காணப்பட ; அல்லது

(இ) இரக்க ; அல்லது

(ஈ) தன்னைப்பற்றிய திருப்திகரமான தகவலொன்றைக் கொடுக்க முடியாத நிலையில் காரணமின்றி உலவ, அல்லது சந்தைக்காப்பாளரினுல் அல்லது ஆணையாளரின் சட்டபூர்வமான கட்டளைகளின் கீழ் பதிற்கடமையாற்றும் ஆள் எவரினுலும் வெளியேறும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்ட பின்னர் தங்கியிருக்கக்

கூடாது.

சந்தை வளவுக்குள் சில நடவடிக்கைகளைத் தடை செய்தல்.

18. எவரும்—

(அ) சந்தைக் கட்டடத்தின் எப்பகுதியையும் அல்லது பொதுச் சந்தை ஒன்றுக்குள் அல்லது அதனைச் சுற்றியுள்ள பகுதியிலுள்ள தளபாடங்கள், விளக்குகள், அல்லது சபையின் ஏனைய சொத்து எதனையும் சேதப்படுத்த அல்லது உருவழிக்க ; அல்லது

(ஆ) பொதுச் சந்தையொன்றில் உபயோகத்துக்காக அல்லது வேறு நோக்கத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நீரைத் துஷ்பிரயோகம் செய்ய, அசுத்தப்படுத்த அல்லது விரயமாக்க அல்லது அந்நீரில் தன்னை அல்லது ஏதேனும் மிருகம், துணிகள் அல்லது வேறு பொருட்களைக் கழுவ ; அல்லது

(இ) எச்சந்தையின் வளவுக்குள் துப்ப அல்லது காறியுமிழ ; அல்லது

(ஈ) எப்பொதுச் சந்தை வளவுக்குள்ளும் அது மூடப்பட்டபின்னர் நித்திரை செய்ய ; அல்லது

(உ) ஒரு பொதுச் சந்தை வளவின் எப்பகுதியிலும் பாய்களைத் தொங்கவிட அல்லது துணிகளை உலரவைக்க ; அல்லது

(ஊ) எப்பொதுச்சந்தை வளவிற்குள்ளும் நாய் அல்லது வேறு மிருகம் எதையும் வைத்திருக்க அல்லது கொண்டுவர அல்லது தனக்குச் சொந்தமான நாய் அல்லது வேறு மிருகம் எதுவும் அத்தகைய வளவுக்குள் அலைந்து திரிவதை அனுமதிக்க ; அல்லது

(எ) எப் பொதுச் சந்தை வளவுக்குள்ளும் அந்நோக்கத்திற்கென் ஏற்பாடு செய்யப்பட்ட கடையிலன்றி ஏதேனும் பறவையை வைத்திருக்க அல்லது அத்தகைய வளவுக்குள் அவருக்குச் சொந்தமான ஏதேனும் பறவை அலைந்து திரிவதற்கு அனுமதிக்கக்

கூடாது.

மாநகரக் கொல்களத்தில் கொல்லப்பட்ட மிருகங்கள் தவிர்ந்த ஏனைய மிருகங்களின் இறைச்சி விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது.

19. மாநகரக் கொல்களத்தில் கொல்லப்படாத எம்மிருகத்தினதும் எச் சடலத்தையும்அல்லது எந்த இறைச்சியையும் எவரும் எப் பொதுச் சந்தைக்குள்ளும் கொண்டுவர அல்லது விற்பனைக்கு வைத்திருக்க அல்லது விற்கக்கூடாது, ஆயின் எவ்வாறுயினும் உத்தரவுப் பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழ் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் குளிரூட்டப்பட்ட இறைச்சியின் அல்லது வேட்டையினுல் பெறப்பட்ட இறைச்சியை விற்பனை செய்வதற்கு இத்துணைவிதி ஏற்புடையதாகாது.

சில சந்தர்ப்பங்களிற் தவிர ஒரு பொதுச் சந்தை தவிர்ந்த ஏனைய இடங்களில் இறைச்சி அல்லது மீன் விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.

20. (1), (2), (3) ஆகிய பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய, எவரும் சபையினுல் அந்நோக்கத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒரு பொதுச் சந்தையில் தவிர மாநகர சபைப் பிரதேசத்திற்குள் இறைச்சி அல்லது மீனை விற்க அல்லது விற்பதற்காக முன்வர அல்லது வெளிக்காட்டக்கூடாது.

(2) ஒரு பொதுச்சந்தையில் தவிர மாநகர சபைப் பிரதேசத்திற்குள் உள்ள எவ்விடத்திலும் மீன் விற்பனை செய்வதற்கு அதிகாரமளித்து, கொண்டுதிரியும் வியாபாரி எவருக்கும் உத்தரவுப்பத்திரமொன்றை ஆணையாளர் வழங்கலாம். காலத்துக்குக் காலம் சபையினுல் நிர்ணயிக்கப்படும் மாதமொன்றுக்கான கட்டணமொன்று அத்தகைய உத்தரவுப்பத்திரம் ஒவ்வொன்றுக்கும் அறவிடப்படல் வேண்டும்.

(3) சபை நிர்ணயிக்கும்வாறுன அத்தகைய கட்டணமொன்றைச் செலுத்துவதன்பேரில், பொதுச் சந்தை தவிர்ந்த எவ்விடத்திலும் இறக்குமதி செய்யப்பட்ட மீன், வேட்டையினுல் பெறப்பட்ட இறைச்சி அல்லது இறைச்சியை விற்பனை செய்வதற்கு அதிகாரமளித்து ஆணையாளர் உத்தரவுப்பத்திரமொன்றை எந்த ஆளுக்கேனும் வழங்கலாம்.

*முற்போந்த துணை விதிகளுக்கு முரணாக விற்கப்படும் இறைச்சியை அல்லது மீனைக் கைப்பற்றுதல்.*

21. ஆணையாளரின் அதிகாரத்தின் கீழ் பதிற் கடமையாற்றும் சபை உத்தியோகத்தரெவரும் அல்லது உப பொலிஸ் பரிசோதகரின் பதவிக்குக் குறையாத பொலிஸ் உத்தியோகத்தரெவரும், 20 ம் துணைவிதியை மீறி விற்பனைக்கு வெளிக் காட்டப்படும் அல்லது கூறி விற்பனை செய்யப்படும் இறைச்சியை அல்லது மீனைக் கைப்பற்றி ஆணையாளர் பணிக்கக்கூடிய அத்தகைய விதத்தில் அழிக்கப்படுவதற்காக மாநகர சபை அலுவலகத்திற்கு அதனை எடுத்துச்செல்லல் சட்டபூர்வமானதாகும்.

*உத்தரவுப்பத்திரத்தில் அல்லது அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப் படாத பொருட்களின் அல்லது ஆரோக்கியத்துக்குத் தீங்கு விளைவிக்கும் பொருட்களின் விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.*

22. (1) ஒரு உத்தரவுப்பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் எவரும் தனது உத்தரவுப் பத்திரத்தில் அல்லது அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்படாத அல்லது ஆரோக்கியத்துக்கு ஒவ்வாத அல்லது பொதுசன ஆரோக்கியத்துக்கு எவ்வகையிலும் தீங்கு விளைவிக்கக்கூடிய பொருள் எதையும் தனது கடையில், இடப்பரப்பில் அல்லது தானியக்குடிலில் விற்பனைக்காக வெளிக்காட்டுதல் அல்லது வைத்திருத்தலாகாது.

(2) ஆணையாளரின் அதிகாரத்தின் கீழ் பதிற் கடமையாற்றும் எந்த உத்தியோகத்தரும், இத் துணைவிதியின் (1) ம் பந்தியின் ஏற்பாடுகளை மீறி விற்பனைக்கு வைத்திருக்கப்படும் எப்பொருளையும் கைப்பற்றி மாநகர சபை அலுவலகத்துக்கு எடுத்துச்செல்வது சட்டபூர்வமானதாகும்.

*கடைகள், இடப் பரப்புகள், தானியக் குடில்கள் ஆகியன பொதுமக்களுக்குத் திறந்து வைக்கப் பட்டிருக்கும் நேரங்கள்.*

23. (1) பொதுமக்களுக்கு வியாபாரஞ் செய்வதற்காகத் தனது கடையை, இடப்பரப்பை அல்லது தானியக்குடிலை மு. ப. 7 மணிக்கும் பி. ப. 6 மணிக்குமிடையில் திறந்து வைத்திருத்தல் ஒரு உத்தரவுப்பத்திரத்தை அல்லது அனுமதிப் பத்திரத்தை வைத்திருக்கும் ஒவ்வொருவரின் கடமையாதல் வேண்டும்.

(2) ஒரு உத்தரவுப்பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் எவரும் எலவே ஆணையாளரிட மிருந்து பெற்ற அனுமதியோடன்றி பொதுமக்களுக்கு அடுத்தடுத்து இரண்டு தினங்களுக்குச் சேவை செய்வதற்கு வேண்டு மென்று அசட்டை செய்ய அல்லது மறுக்கக்கூடாது.

*வாடகைகள் அல்லது கட்டணங்கள் சம்பந்தமான பிணக்குகளை விசாரணைசெய்வதற்கு ஆணையாளருக்குரிய அதிகாரம்.*

24. வாடகை அல்லது கட்டணம் எதுவும் சம்பந்தமான எந்தப் பிணக்குப் பற்றியும் விசாரணை செய்து நீதியான தெனத் தனக்குத் தோன்றும் அத்தகைய கட்டளையை இடுவதற்கு ஆணையாளருக்கு அதிகாரமிருத்தல் வேண்டும்.

*சந்தை வளவுக்குள் கடமைகளைச் செய்யும் சபை உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய ஆட்களுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தல், முட்டுக் கட்டைசெய்தல் முதலியன.*

25. ஏதேனும் பொதுச் சந்தையைக் கண்காணிப்பதற்கு அல்லது அங்குள்ள வாடகைப் பணங்களை அல்லது கட்டணங் களைச் சேகரிப்பதற்கு அல்லது அங்கு ஒழுங்கையும் சுத்தத்தையும் நிலைநாட்டுவதற்கு சபையினால் நியமிக்கப்பட்ட சந்தைக் காப்பாளர் எவரும் அல்லது உத்தியோகத்தர் எவரையும் அவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றுவதில் எதிர்க்க அவர் களுக்கு முட்டுக்கட்டையிட, தடைசெய்ய, அல்லது துன்புறுத்தக்கூடாது.

*ஆணையாளரினால் அங்கீகரிக்கப்படாத அடையாளப் பலகைகளைப் பார்வைக்கு வைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது.*

26. ஒரு உத்தரவுப்பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் எவரும் ஆணையாளரினால் அங்கீ கரிக்கப்படாத அடையாளப்பலகை எதையும் தனது கடையில், இடப்பரப்பில் அல்லது தானியக்குடிலில் பார்வைக்கு வைக்க அல்லது பார்வைக்கு வைப்பிக்கக்கூடாது.

*சந்தை வளவிற்குள் பகிரங்க ஏலத்தின் மூலம் செய்யப்படும் விற்பனைகள் தடைசெய்யப் பட்டுள்ளன.*

27. ஒரு உத்தரவுப்பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் எவரும் ஆணையாளரிடமிருந்து எலவே பெற்ற எழுத்திலான அங்கீகாரமின்றி எப் பொதுச்சந்தையின் வளவுக்குள்ளும் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை எதையும் நடாத்தக்கூடாது.

*ஒலிபரப்புக்கருவிகள், கிராமபோன் முதலானவற்றின் உபயோகம் தடை செய்யப்பட்டுள்ளது.*

28. எவரும் பொதுச்சந்தை எதிலுமுள்ள கடை, இடப்பரப்பு அல்லது தானியக்குடில் எதிலும் ஒலிபரப்புக்கருவி கிராமபோன், வானொலிக் கருவி, மீளப்பரப்பல் கருவி ஒலிபெருக்கி அல்லது இது போன்ற வேறு கருவி எதையும் இயக்கக்கூடாது.

29. (1) இரண்டாம் துணைவிதியின் கீழ் வழங்கப்படும் உத்தரவுப்பத்திரம் அல்லது அனுமதிப்பத்திரம் எதையும் முற்போந்த துணைவிதிகளெதையும் மீறியமைக்காக அவ்வுத்தரவுப்பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர் தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுடைய நீதிமன்றமொன்றினால் இரண்டாவது அல்லது அதற்குப் பிந்திய தடவையில் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இல்லாதொழிக்கச் செய்தல் அத்தகைய நீதிமன்றத்துக்கு சட்டபூர்வமானதாகும். குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவர்களின் உத்தரவுப்பத்திரங்கள் அல்லது அனுமதிப்பத்திரங்கள் நீதிமன்றங்களினால் இல்லாதொழிக்கப்படுதலும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவர்களுக்கு உத்தரவுப்பத்திரங்களை அல்லது அனுமதிப்பத்திரங்களை வழங்க மறுப்பதற்கு ஆணையாளருக்கு இருக்கும் அதிகாரமும்.

(2) உத்தரவுப்பத்திரம் அல்லது அனுமதிப்பத்திரம் இல்லாதொழிக்கப்பட்டுள்ள அல்லது முற்போந்த துணைவிதிகள் எதையும் மீறியமைக்காக அல்லது தண்டச் சட்டக்கோவையின் கீழான தவறு எதற்காகவும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள எவருக்கும் புதியதொரு உத்தரவுப்பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு ஆணையாளர்மறுக்கலாம்.

30. இத்துணைவிதிகளின் ஏற்பாடுகள் எதையும் மீறி நடக்கும் எவரும் ஒரு தவறைப் புரிந்தவராதலுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கும் இரண்டாவது அல்லது அதற்குப் பிந்திய தவறு புரியும் விடயத்தில் இரு நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கும் தொடர்ந்து மீறும் ஒரு விடயத்தில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் அல்லது அத்தகைய மீறுகையைக் கவனத்துக்குக் கொண்டு வந்து ஆணையாளரிடமிருந்து எழுத்திலான அறிவித்தலொன்று வழங்கப்பட்ட பின்னர் அத்தகைய மீறுகை தொடர்ந்து செய்யப்பட்ட ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தைந்து ரூபாவுக்கு மேற்படாத மேலுமொரு குற்றப்பணத்திற்கு ஆளாவர். தண்டம்.

## அட்டவணை

### உத்தரவுப்பத்திரப்படிவம்—துணைவிதி 2(2)(அ)

### பொதுச் சந்தைக் கடை இடப்பரப்பு தானியக்குடில்

### உத்தரவுப்பத்திர இல.......

..................................................இல் அமைந்திருக்கும் பொதுச் சந்தையிலுள்ள .............................. ஆம் இலக்க கடையை/இடப்பரப்பை/தானியக்குடிலை ........................................ விற்பனை செய்வதற்காக................ வைக் கொண்ட மாதாந்த வாடகையை/நாளாந்தக் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் உபயோகிப்பதற்கு அல்லது ஆட்சிபுரிவதற்கு............ என்பவர் இத்தால் அதிகாரமளிக்கப்படுகிறார்.

இந்த உத்தரவுப்பத்திரம், நீதிமன்றமொன்றினால் இல்லாதொழிக்கப்பட்டாலன்றி அல்லது அத்தகைய உபயோகம் அல்லது ஆட்சியானது எழுத்திலான ஒரு முழுமாத அறிவித்தலைச் சபைக்குக் கொடுத்த பின்னர் உத்தரவுப் பத்திரக்காரரினால் முடிவுறுத்தப்பட்டாலன்றி அல்லது உத்தரவுப்பத்திரக்காரர், (252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 156 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய சந்தையிலிருந்து வெளியேற்றப்பட்டால் அன்றி 19.............................................ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் வரை நடைமுறையிலிருக்கும்.

197.......

ஆணையாளர்,
மாநகரசபை, குருநாகல்.

*பொருத்தமற்றதை நீக்கி விடுக.

10—673—19.10.73 ம் திகதிய வர்த்தமானி இல. 82

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக் குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள் ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | 5.10.73 | வெள்ளி | 28. 9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 12.10.73 | வெள்ளி | 05.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 19.10.73 | வெள்ளி | 12.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 26.10.73 | வெள்ளி | 19.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| **நவெம்பர்** | 2.11.73 | வெள்ளி | 26.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 9.11.73 | வெள்ளி | 02.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 16.11.73 | வெள்ளி | 09.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 23.11.73 | வெள்ளி | 16.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 30.11.73 | வெள்ளி | 23.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| **திசெம்பர்** | 7.12.73 | வெள்ளி | 30.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 07.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 14.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 21.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.